முருகப்பெருமான் துணை

**மகான் பீமசேனர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.12.2023, ஞாயிற்றுக்கிழமை

1. தவராஜனே ஞானதேசிகனே
தரணி காக்கவந்த அரங்கனே
அவதாரம் கலியினில் எடுத்து
அறம் வளர்க்கின்ற தருமனே
2. தருமனே உன் பெருமை கூறி
தரணியில் அறிவுரை ஆசி
பெருமைபட சோபகிருது தேள்திங்கள்
புகலுவேன் மூவையீர் திகதி கதிர் வாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 17 ம் நாள், 03.12.2023, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் பீமசேனர் யானும்
வழங்குவேன் உலக நலம்பெற
சோரமிலா ஞானவான்கள் படை
செகமெல்லாம் உருவாக்க வேண்டி
4. வேண்டியே தன்னார்வத் தொண்டர்களை
வேலவன் வழிபாட்டை கொண்டு
தொண்டுக்கழைத்து தீட்சை தந்து
தேசமெங்கும் தருமம் வளர்க்கும்
5. வளர்க்கும் அரங்கன் மார்க்கம்
வல்லமை கூடி வருதலுற
தளர்வின்றி அரங்கன் படைகளாக
தரணியோர் இணைந்து வர
6. வருகவே உலகினில் மாற்றமதும்
வந்தடையும் தொண்டர்கள் வழி
முருகப் பெருமான் இறங்கி அருள
முழுமைதரும் வண்ணம் உலகில்

7. உலகினில் மக்களுக்கு ஞானபலம்
உயர்வாய் கூடி இனிதே
உலகமெங்கும் அமைதி பாதுகாப்பு
உண்மைபட ஞான ஆட்சி மலரும்

8. மலரவே கலியின் கொடுமையான
மனிதர்கள் ஆட்சி முடிவுற்று
வளரும் ஞானிகள் ஆட்சி
வல்லமை கொண்ட தரும ஆட்சியாக

9. ஆகவே அரங்கனை அனுகி
அருளமுது உண்டு வணங்கி
வகைபட தீட்சை ஏற்று
வரம்வேண்ட வாய்ப்பாகி

10. ஆகியே அற்புதம் நடக்கும்
அனைவரும் சுத்தநெறிபட வர
அகிலம் எங்கும் ஞானவான்களாக
அளவிலாப் பெருகிச் சிறந்து

11. சிறந்துமே கலியுகம் தானும்
சிறப்பான ஞானயுகமாகும்
அருந்தவசி அரங்கன் அவதாரம்
ஆற்றல்பட மகத்துவம் புரியும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–